காலைக்கதிர் (19.03.2025)



கரூர், டி.என்.பி,எல்., ஆலை சார்பில், நடையனூர் நதி நீரேற்றுப்பாசன அமைப்பின் பொறுப்பாளர்களிடம் டி.என்.பி.எல்.,நிறுவனத்தின் (மனிதவளம்) பொது மேலாளர் கலைச்செல்வன் மற்றும் (மனிதவளம்) முதன்மை மேலாளர் சிவக்குமார் 3.75 லட்சத்திற்கான காசோலையை வழங்கினர்.

# நிதி உதவி வழங்கிய டி.என்.பி.எல்., நிறுவனம்

**கரூர், மார்ச் 19**

கரூர் மாவட்டம் புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில், கோவில்களுக்கு புனரமைப்பு நிதி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிறுவன பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தலைமைவகித்தார். சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்டங்கள் செய்யப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக, நடையனூர் நதி நீரேற்றுப்பாசன விவசாயிகள் அமைப்பின், தலைமை நீரேற்று நிலையத்தை மறுசீரமைப்பு செய்திடவும், பழுதடைந்த மின்மோட்டார்களை சரி செய்திட, 3.75 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

சுற்றுப்புற கிராமங்களான உப்புப்பாளையம், மேட்டுப்பாளையம், வேலாயுதம் பாளையம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோவில்களுக்கு புனரமைப்பு மற்றும் மகா கும்பாபிஷேக விழா நடத்துவதற்கு, 1 லட்சம் ரூபாய், அந்தந்த கோவில் திருப்பணிக்குழு உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

# மாலை முரசு

திருச்சி பதிப்பு

20–3–2025 (பங்குனி 6) வியாழக்கிழமை






விவசாய மக்களின் வளர்ச்சிக்காக

## செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் ரூ.4.75 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி

கரூர், மார்ச்.20–

கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விவசாய பெருமக்களின் வளர்ச்சிக்காக வாய்க்கால் தூர்வாருதல், கால்நடை மருத்துவர் முகாம் நடத்துதல், போன்ற பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் நடையூர் நதிநீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் தலைமை நீரேற்று நிலையத்தை மறு சீரமைப்பு செய்திடும் வகையில் பழுதடைந்த மின் மோட்டார்களை சரி செய்திடவும் ரூ 3.75 லட்சத்திற்கான காசோலையை விவசாயிகள் அமைப்பிற்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் சுற்றுப்புற கிராமங்களான உப்பு பாளையம், மேட்டுப்பாளையம் மற்றும் வேலாயுதம்பாளையம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோவில்களுக்கு புறனமைப்பு மற்றும் மகா கும்பாபிஷேகம் விழா நடத்துவதற்காக நிதியாக ரூ 1 லட்சத்திற்கான காசோலைகளையும் அந்த கோவில் திருப்பணி குழு உறுப்பினர்களிலும் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் மற்றும் முதன்மை மேலாளர்( மனித வளம்) சிவக்குமார் ஆகியோர் வழங்கினர்.

**தினத்தந்தி (19.03.2025)**



புகழூர் டி.என்.பி.எல். சார்பில்

# நீரேற்று நிலையம், கோவில்களை புனரமைக்க ரூ.4¾ லட்சம் நிதியுதவி

நொய்யல், மார்ச்.19-

புகழூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (டி.என்.பி.எல்.) சமூக மேம்பாடு திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வளர்ச்சிக்காக வாய்க்கால் தூர் வாருதல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக நடையனூர் நதி நீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் தலைமை நீரேற்று நிலையத்தை மறு சீரமைப்பு செய்திடவும், பழுதடைந்த மின்மோட்டார்களை சரி செய்திடவும் ரூ.3¾ லட்சம் காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதன்மை மேலாளர் (மனித வளம்) சிவகுமார் ஆகியோர் விவசாய அமைப்பின் பொறுப்பாளர்களிடம் வழங்கினார்கள்.

இதேபோல் சுற்றுப்புற கிராமங்களான உப்புபாளையம், மேட்டுப்பாளையம், வருந்தியாபாளையம், வேலாயுதம்பாளையம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோவில்களை புனரமைப்பு செய்து கும்பாபிஷேகம் நடத்த மொத்தம் ரூ.1 லட்சத்துக்கான காசோலையை அந்தந்த கோவில் திருப்பணி குழு உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

தினகரன் (19.03.2025)

தமிழ்நாடு காகித ஆலை சார்பில்

# சமூக மேம்பாட்டு பணிக்கு ரூ.4.75 லட்சம் நிதியுதவி

வேலாயுதம்பாளையம், மார்ச் 19: தமிழ்நாடு காகித ஆலை சார்பில் சமூக மேம்பாட்டு பணிக்கு ரூ.4.75 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாய பெருமக்களின் வளர்ச்சிக்காக, வாய்க்கால், தூர் வாருதல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது.



தமிழ்நாடு காகித ஆலை சார்பில் ரூ.3.75 லட்சத்திற்கான காசோலையை நடையனூர் நதி நீரேற்று பாசன அமைப்பின் பொறுப்பாளர்களிடம் காகித ஆலை நிறுவனத்தின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் மற்றும் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே எஸ்.சிவக்குமார் ஆகியோர் வழங்கினர்.

அதன் ஒரு பகுதியாக, நடையனூர் நதி நீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின், தலைமை நீரேற்று நிலையத்தை மறுசீரமைப்பு செய்திடவும், பழுதடைந்த மின் மோட்டார்களை சரி செய்திடவும் ரூ.3.75 லட்சத்திற்கான காசோலை விவசாயிகள் அமைப்பிற்கு வழங்கப்பட்டது. மேலும், சுற்றுப்புற கிராமங்களான உப்புப்பாளையம், மேட்டுப்பாளையம். வருந்தியாபாளையம். மற்றும் வேலாயுதம்பாளையம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோயில்களுக்கு புனரமைப்பு மற்றும் மகா கும்பாபிஷேக விழா நடத்துவதற்கு நிதியுதவியாக ரூ.1 லட்சத்திற்கான காசோலைகள் அந்தந்த கோயில் திருப்பணிக்குழு உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

**தினமணி (19.03.2025)**

# நீரேற்று நிலையத்தை மறுசீரமைக்க டிஎன்பிஎல் ஆலை நிதியுதவி



நீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் பொறுப்பாளர்களிடம் நிதியுதவிக்கான காசோலையை வழங்கிய காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன், முதன்மை மேலாளர் (மனித வளம்) கே.எஸ். சிவகுமார்.

**கரூர், மார்ச் 18:** நடையனூர் நீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் நீரேற்று நிலையத்தை மறுசிரமைக்க டிஎன்பிஎல் ஆலை சார்பில் செவ்வாய்க்கிழமை நிதியுதவி வழங்கப்பட்டது.


கரூர் மாவட்டம், புகளூர் காகிதபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சமூக மேம்பாடு திட்டத்தின் கீழ் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக, நடையனூர் நதி நீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் தலைமை நீரேற்று நிலையத்தை மறு சிரமைப்பு செய்திடவும், பழுதடைந்த மின்மோட்டார்களை சரி செய்திடவும் ரூ. 3.75 லட்சத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை ஆலை வளாகத்தில் நடைபெற்றது.

இதில் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் ( மனித வளம்) கே. கலைச்செல்வன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவகுமார் ஆகியோர் விவசாய அமைப்பின் பொறுப்பாளர்களிடம் ரூ.3.75 லட்சத்துக்கான காசோலையை வழங்கினர்.

**கோயில்களுக்கு நிதியுதவி:** இதேபோல், ஆலையின் சுற்றுப்புற கிராமங்களான உப்புபாளையம், மேட்டுப்பாளையம், வருந்தியா பாளையம், வேலாயுதம்பாளையம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோயில்களுக்கு புனரமைப்பு மற்றும் மகா கும்பாபிஷேக விழா நடத்துவதற்கு நிதி உதவியாக ரூ. ஒரு லட்சத்துக்கான காசோலைகளை அந்தந்த கோயில் திருப்பணி குழு உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

மாலை மலர் 19.03.2025



நடையனூர் தலைமை நீரேற்று நிலையத்தை மறு சீரமைப்பு செய்திடவும், பழுதடைந்த மின்மோட்டார்களை சரி செய்திடவும் ரூ 3.75 லட்சத்திற்கான காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதன்மை மேலாளர் (மனித வளம்) சிவகுமார் ஆகியோர் விவசாய அமைப்பின் பொறுப்பாளர்களிடம் வழங்கிய போது எடுத்த படம்.

### கும்பாபிசேகம் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளுக்காக

# புகளூர் காகித நிறுவனம் சார்பில் ரூ4.75 லட்சம் காசோலை வழங்கல்

வேலாயுதம்பாளையம், மார்ச்.19—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சமூக மேம்பாடு திட்டத்தின் கீழ் விவசாய பெருமக்களின் வளர்ச்சிக்காக வாய்க்கால் தூர் வாருதல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு நலத்தி ட்டங்களை செய்து வருகி றது.

அதன் ஒரு பகுதியாக நடையனூர் நதிநீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் தலைமை நீரேற்று நிலையத்தை மறு சீரமைப்பு செய்திடவும், பழுதடைந்த மின்மோட்டா ர்களை சரி செய்திடவும் ரூ.3.75 லட்சத்திற்கான காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதன்மை மேலாளர் (மனித வளம்) சிவகுமார் ஆகியோர் விவ சாய அமைப்பின் பொறு ப்பாளர்க ளிடம் வழங்கி னார்கள்.

அதேபோல் சுற்றுப்புற கிராமங்களான உப்புபா ளையம், மேட்டுப்பாளையம், வருந்தியா பாளையம், வேலாயுதம்பாளை யம் ஆகிய ஊர்களில் அமை ந்துள்ள கோயில்களுக்கு புனர மைப்பு மற்றும் மகா கும்பாபி ஷேக விழா நடத்துவதற்கு நிதி உதவியாக ரூ.1 லட்சத்திற்கான காசோ லைகளை அந்தந்த கோவில் திருப்பணி குழு உறுப்பி னர்களிடம் வழங்கப்பட்டது.

**தினமலர் (20.03.2025)**

# நீரேற்று நிலைய மேம்பாட்டிற்கு ரூ. 3.75 லட்சம் நிதி உதவி

**வேலாயுதம்பாளையம், மார்ச் 20–**

புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சமூக மேம்பாடு திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வளர்ச்சிக்காக வாய்க்கால் தூர் வாருதல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நடையனூர் நதிநீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் தலைமை நீரேற்று நிலையத்தை மறு சீரமைப்பு செய்திடவும், பழுதடைந்த மின்மோட்டார்களை சரி செய்திடவும் ரூ.3 லட்சத்து 75 ஆயிரம் நிதி உதவி வழங்கி உள்ளது. அதற்கான காசோலையை காகித ஆலை வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் மனித வளத்துறை பொது மேலாளர் கலைச்செல்வன், முதன்மை மேலாளர் சிவகுமார் ஆகியோர் விவசாய அமைப்பு நிர்வாகிகளிடம் வழங்கினர்.

உப்புபாளையம், மேட்டுப்பாளையம், வருந்தியாபாளையம், வேலாயுதம்பாளையம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களுக்கு புனரமைப்பு மற்றும் கும்பாபிஷேக விழா நடத்துவதற்கு நிதி உதவியாக ரூ.ஒரு லட்சத்திற்கான காசோலைகளைஅந்தந்த கோயில் திருப்பணி குழு உறுப்பினர்களிடம் வழங்கினர்.



நடையனூர் நதிநீரேற்று பாசன விவசாயிகள் அமைப்பின் தலைமை நீரேற்று நிலைய மேம்பாட்டிற்குகாகிதஆலை சார்பில் ரூ. 3.75 லட்சத்தை மனித வளத்துறை பொது மேலாளர் கலைச்செல்வன், முதன்மை மேலாளர் சிவகுமார் ஆகியோர் விவசாய அமைப்பின் நிர்வாகிகளிடம் வழங்கினர்.